<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 168/2023 நாள்: 26.11.2025 வா.சா. 2 – கண்ணன்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் பெயர் முத்து ராயப்பன். அவருக்கு 40 வயதிருக்கும். முத்து ராயப்பன் வீடு கரூர் மாவட்டம், முன்னுர் கிராமத்தில் உள்ளது. தெரு பெயர் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் ஊர் தெரியும், ஆனால் அவர் வீட்டிற்கு நான் போனதில்லை. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு சதிஷ்குமார் வீட்டில் வைத்து, காலை 9 மணி முதல் 10 மணிக்குள் மேற்படி கடனுறுதி சீட்டு எழுதப்பட்டது. என்னை யார் கடனுறுதி சீட்டு எழுத அழைத்தார்கள் என்றால் யாரும் அழைக்கவில்லை, நான் சதிஷ்குமாரை பார்ப்பதற்காக சதிஷ்குமார் வீட்டிற்கு சென்ற போது எழுதினேன். நான் கடனுறுதி சீட்டை எழுதுவது வழக்கமா என்றால் இல்லை. நான் கடனுறுதி சீட்டை எழுதுவதற்கு முன்பாக மாதிரி கடனுறுதி சீட்டை ஒரு பேப்பரில் எழுதினேனா என்றால் இல்லை. கடனுறுதி சீட்டிற்கான பணத்தை பிரதிவாதியிடம் காலை 9 மணி முதல் 10 மணிக்குள் சதிஷ்குமார் கொடுத்தார். பணத்தை பிரதிவாதி எண்ணி பார்க்கவில்லை. சதிஷ்குமார் கொடுத்ததை பிரதிவாதி அப்படியே வாங்கி கொண்டார். நான் சொல்வது போல் வாதி, பிரதிவாதியிடம் ரூ.15 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கடனுறுதி சீட்டை நீல நிறமுள்ள மையினால் ஆன பேனாவால் எழுதினேன். அதே பேனாவால் அனைவரும் கையொப்பம் போட்டோமா என்ற சாட்சி ஞாபகம் இல்லை. கடனுறுதி சீட்டில் அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் சாட்சி

ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். கடனுறுதி சீட்டில் தமிழ் தேதி எழுதியுள்ளேனா, ஆங்கில தேதி எழுதியுள்ளேனா என்றால் சாட்சி இரண்டும் எழுதப்பட்டது என்று கூறுகிறார். கடனுறுதி சீட்டின் படிவத்தை யார் வாங்கி வந்தார் என்றால் பிரதிவாதி தான் வாங்கி வந்தார். கடனுறுதி சீட்டில் என்ன காரணத்திற்காக பிரதிவாதி கடன் வாங்கினார் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் பிரதிவாதியின் குடும்ப செலவுக்கும், இதர செலவிற்காகவும் எழுதப்பட்டிருந்தது. பிரதிவாதி தமிழில் கையொப்பம் போட்டாரா, ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டாரா என்றால் முழுவதும் தமிழில் கையொப்பம் போட்டார். நான் ¼ மணி நேரத்தில் கடனுறுதி சீட்டை எழுதி விட்டேன். கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பமிட்டவர் முத்து ராமசந்திர மூர்த்தி. அவரை யார் அழைத்து வந்தார் என்றால் சாட்சி சதிஷ்குமார் வீட்டில் ஏற்கனவே நான் செல்வதற்கு முன்பாக முத்து ராமசந்திர மூர்த்தி இருந்தார். சாட்சி கையொப்பம் இட்டவர் தமிழில் கையொப்பம் போட்டாரா, ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டாரா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். சாட்சி கையொப்பம் இட்ட நபர் எந்த பேனாவில் கையொப்பமிட்டார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சி கையொப்பம் இட்டவரின் பெயர் முழுமையாக கடனுறுதி சீட்டில் எழுதப்பட்டிருந்ததா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். கடனுறுதி சீட்டில் எத்தனை இடத்தில் ரூ.15 லட்சம் என்று எண்ணாலும், எழுத்தாலும் எழுதியுள்ளோம் என்றால் சாட்சி ஒரு இடத்தில் எண்ணாலும், ஒரு இடத்தில் எழுத்தாலும் எழுதப்பட்டிருந்தது. தற்போது சாட்சி கூடுதலாக ஒரு இடத்தில் எண்ணாலும் எழுதப்பட்டிருந்தது என்று கூறுகிறார். மேற்படி அசல் தொகைக்கு ரூ.1 வட்டி என்று எழுதப்பட்டுள்ளது. கடனுறுதி சீட்டில் முதல் கையொப்பத்தை பிரதிவாதி போட்டார். அதன் பிறகு சாட்சி கையொப்பம் போட்டார். அதன் பிறகு நான் கையொப்பம் போட்டேன். நான் சொல்வது போல் கடனுறுதி சீட்டில் பிரதிவாதி கையொப்பம் போடவில்லை, நானும், வாதியும், சாட்சியும் சேர்ந்து பொய்யாக உற்பத்தி செய்தது தான் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு

என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதியின் முகவரியை சரியாக என்னால் சாட்சியம் அளிக்கும் போது சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள சாட்சியின் முகவரி அடித்தலுடன் எழுதப்பட்டுள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.1 யை பார்த்து எழுதும் போது இல்லை என்று சொல்லிவிட்டு தற்போது அது பற்றி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் சொல்வது போல் பிரதிவாதி, வாதியிடம் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்து கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்கின்ற தேதியில் பிரதிவாதி வாதிக்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையிலும், என் முன்னிலையிலும் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்து கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு கடனுறுதி சீட்டில் உள்ள அடித்தல், திருத்தல்கள் பற்றி ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் அடித்தல், திருத்தல் இருந்தால் அதை பற்றி குறிப்பில் சொல்லியிருப்போம், அவ்வாறு சொல்லாததால் அவசர கதியில் நானும், வாதியும் சேர்ந்து உற்பத்தி செய்த ஆவணம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.26 15:15:10 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.